24th September 1955]

படுகிறது ? என்பதைப் பற்றிய புள்ளி விவரங்களைத்தான் வியாபாரிகள் கேட்டிருந்தார்கள். அதை அனுசரித்துத்தான் தற்போது போடப்படுகிற வரி சரியானதா என்பதை நிர்ணயிக்க முடியும். அந்த மாதிரியான புள்ளி விவரங்கள் கொடுக்கப்படுமா ? மேலும் இந்தமாதிரியான ஒரு மகாநாட்டில் சட்டசபையின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ள சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி கேட்டால் எப்படி பதில் அளிக்கப்படுகிறதோ அதேமாதிரியாக மகாநாட்டில் கேட்கப்படும் கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM : இந்த மகாநாட்டின் நோக்கம் என்ன என்று அறிய விரும்புகிறேன். பலதரப்பட்ட முனை விற்பனை வரி இருக்கவேண்டுமா, அல்லது ஒரு முனை விற்பனை வரி இருக்கவேண்டுமா, என்பதைப்பற்றி இந்த மகாநாடு விவாதிக்குமா ? அல்லது ஒரு முனை விற்பனை வரி கொண்டுவரவேண்டுமென்பதை சர்க்கார் முடிவு செய்து விட்டு அதன் சாத்தியக் கூறுகளைப்பற்றி மாத்திரம் இந்த மகாநாடு விவாதிக்குமா ? ஒரு முனை விற்பனை வரி கொண்டுவரலாமா என்பதைப்பற்றி முடிவு செய்யவே இந்த மகாநாடு கூட்டப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மகாநாடு டாக்ஸேஷன் விசாரணைக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளைப்பற்றி விவாதிக்கும். அந்தக் கமிஷனின் சிபார்சுகளில் ஒரு முனை விற்பனை வரி விதிப்பது பற்றியும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா விஷயங்களையும் கவனிப்பதற்காகத்தான் இந்த மகாநாடு கூட்டப்படுகிறது.

Minimum number of buses for a bus operator

* 2447 Q.—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) whether a deputation on behalf of small bus operators met the Chief Minister and the Transport Minister on 29th March 1955 and presented a memorandum regarding the difficulties resulting from the new Government Order relating to the fixation of minimum number of buses for a fleet for a bus operator; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI B. PARAMESWARAN : (a) Yes, Sir, if by new Government Order is meant G.O. No. 3353, Home, dated 15th November 1954.

(b) Government have cancelled the order issued in November 1954, according to which each viable unit of stage carriages in this State should consist of not less than ten buses and have restored the orders that were in force prior to November 1954, according to which transport authorities, while granting stage carriage permits, should work up to the minimum of five permits with a spare bus for each operator.

SRI M. PALANIYANDI : இந்தச் சட்டம் வந்தபிறகு சிறு பஸ் முதலாளிகளுக்கு பர்மிட் கொடுப்பது மறுக்கப்படுகிறது என்பதாக அரசாங்கத்தினிடம் சிறு பஸ் முதலாளிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சிறு பஸ் முதலாளிகளுக்கும் பர்மிட் கொடுக்கலாம் என்பதாக அரசாங்கம் சிறு பஸ் முதலாளிகளுக்கு அனுகூலம் செய்யும் பொருட்டு உத்தரவு

போடுவார்களா ? நிலையான சட்டம் இல்லாததின் காரணமாக பல தொந்தரவுகள் ஏற்படுவதால் நிலையான உத்தரவை போடுவதற்கும் முன் வருவார்களா ?

The Hon. Sri B. PARAMESWARAN : பிளானிங் கமிஷன் குறைந்தது 20 பஸ்களை உடையவர்களுக்குத்தான் பர்மிட் வழங்க வேண்டுமென்று சிபார்சு செய்தது. ஆனால் டிரான்ஸ்போர்ட் இலாகாவில் 10 பஸ் உடைய சிறு பஸ் முதலாளிகளுக்கும் பர்மிட் வழங்கலாம் என்று உத்தரவு போடப் பட்டது. குறைந்தது 10 பஸ்களாவது இருந்தால்தான் பிரயாணிகளுக்கு நல்ல வசதியை அவர்களால் தர முடியும். மேலும் பஸ் முதலாளிகளுக்கும் சிறிது லாபம் ஏற்படும் என்பதற்காகவே அம்மாதிரி முடிவு செய்யப் பட்டது. சிறு பஸ் முதலாளிகள் அரசாங்கத்தினிடம் வந்து கேட்டுக் கொண்டதின் காரணமாக 5 பஸ்கள் இருந்தாலும் பர்மிட் வழங்கலாம் எனத் திரும்பவும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதனால் யாராவது பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு யாரும் பொறுப்பாளி அல்ல. அதிகாரிகள் இருக்கின்ற உத்தரவை அனுசரித்துத்தான் பஸ் பர்மிட் வழங்க மறுத்திருக்கலாம்.

Sri S. RAMALINGAM : ஒரு பஸ் இரண்டு பஸ்கள் வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கும்கூட அரசாங்கம் தற்போது பர்மிட் வழங்க முன்வருமா ? ஐந்து பஸ்களாவது இருக்கவேண்டுமென்று சொல்வதால் அவர்களுக்கு எல்லாம் பர்மிட் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கபபடுகிறார்கள்.

The Hon. Sri B. PARAMESWARAN : இதற்காக சில விதிகளை அமைத்திருக்கிறோம். விதிகளை அனுசரித்துத்தான பர்மிட்கள் வழங்கப் படும்.

Dr. K. B. MENON : Are the Government aware that this new regulation will be pushing out small bus-owners and that the Government have been making frequent changes in their policy with regard to this matter? May I also know whether the Government have received representations from small bus-owners asking for time to make the necessary adjustments called for?

The Hon. Sri B. PARAMESWARAN : I have already said that in response to the representations made by small operators we have fixed the minimum as five in order that the units may be viable. We have reduced the number of buses for each unit of stage carriages from 10 to 5.

Sri A. SAMBASIVAM : பெரிய ஆபரேடர்கள்கூட குறைந்தது 4, 5 பஸ் உடையவர்களுக்குத்தான் பர்மிட் வழங்கப்படுகிறது என்கின்ற எண்ணத்தில் தங்களிடமுள்ள பஸ்களை தங்கள் மனைவியின் பேரிலும், பிள்ளை பேரிலும் போட்டுக்கொண்டு தனித்தனி பஸ் முதலாளிகள் போல பர்மிட்டுக்கு அப்ளை செய்கிறார்கள். இதை அறிந்து அரசாங்கம் தக்க ஏற் பாடு செய்யுமா ?

The Hon. Sri B. PARAMESWARAN : அரசாங்கத்தாருக்கு இதுமாதிரியாக தகவல் ஏதாவது கொடுத்தால் பினாமி டிரான்ஸாக்ஷன் என்று அந்த பர்மிட்கள் ரத்து செய்யப்படும்.

Sri V. BALAKRISHNAN : Can small bus-owners as small bus-owners claim privilege and priority over efficiency and public interest?

The Hon. Sri B. PARAMESWARAN : All these factors will be taken into consideration at the time of the grant of permits provided they are within the rules.